முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பட்டினத்தார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

28.09.2018, வெள்ளிக்கிழமை

1. **தருமனே ஞானத்தலைவனே**
**தரணி காத்திட அவதாரம்தனை**
**ஆறுமுக அரங்கமகானாய் நிகழ்த்தி**
**அற்புதம் நடத்தும் தவசியே**
2. தவசியே உன் பெருமை கூறி
தரணியிலே **விளம்பி தரிவை திங்கள்**
**அவணியிலே முன்னான்கு திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 12ம் நாள் 28.09.2018, வெள்ளிக்கிழமை)**
**அறிவிப்பேன் பட்டினத்தார் யானும்**
3. யானும் ஒளி சூட்சும நூலை
உலக நலமுற உரைப்பேன்
ஞானபூமி தமிழகம் தன்னில்
ஞானிகள் ஆளுமை வர இருக்க
4. இருக்கவே கலிகால மக்களே
இனியும் அலட்சியம் கொள்ளா
கருத்தாக சைவ நெறி ஏற்று
கந்தபெருமான் வழிபாடு தன்னை
5. தன்னிலே நித்திய பூசையாக
தரணியோர் செய்து கொண்டு
அன்னதானம் எனும் உயரிய
அருட்தயவு நெறியை ஏற்று
6. ஏற்று தமிழகமெங்கும் செய்து
ஏழ்மை நிலைகளை விரட்டி
ஆற்றல்பட தன்னார்வமிக்க
அன்பர்களை தொண்டு வழி நிரப்பி
7. நிரப்பி அரங்கன் தலைமையை
நிலவுலகோர் ஏற்று நடக்க
பரப்பிவர அரங்கன் புகழை
பண்பான சமூகமாக மாறி
8. மாறியே தமிழகம் தொட்டு
மாற்றம் ஞான ஆட்சியாக
தெரியவரும் அரங்கன் மூலம்
தொண்டுகள் பெருகி வருக
9. வருகவே ஆறுமுகன் ஆளுமை
வள்ளல் தரும பலமுடன் பெருகி
மாறுதலும் நல்ல ஆளுமையும்
மண்ணுலகில் பெருகி வளர்ச்சி

10. வளர்ச்சி காணும் இயற்கை பலமுடன்
வல்லமைபட நேர்மைமிக்க
தளர்வில்லா அதிகார பலமும்
தயவே மூலமாகக் கொண்ட ஆளுமை

11. ஆளுமை பெருகி மக்களுக்கு
அணுகிடும் பாதுகாப்பு பலம்
வலுவான ஏற்றம் மாற்றம்
வடிவேலனால் கண்டு சிறக்கும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் பட்டினத்தார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமங்களை செய்திட்ட தருமராசனே ஞானத்தலைவனே இவ்வுலகை காத்திட அவதாரமாக ஆறுமுக அரங்கமகா தேசிகனாக ஆகியே இவ்வுலகினில் பல அற்புதங்களை நிகழ்த்தி வருகின்ற மகா ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 12ம் நாள் 28.09.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பட்டினத்தார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பட்டினத்தார்.

ஞானிகள் தோன்றி வாழ்ந்த, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஞானபூமியாம் தமிழகத்தினில் விரைவில் ஞானிகள் ஆட்சிக்கு வர இருக்கின்றதப்பா. ஆதலினால் கலியுக மக்களே இனியும் அலட்சியம் கொள்ளாமல் நீங்களெல்லாம் விரைந்து மாறி விடுங்கள். உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவை உடனே மேற்கொள்ளுங்கள். அரங்கன் கூறும் தூயநெறியினை ஏற்று கடைப்பிடித்து முருகப்பெருமான் வழிபாடுகளை விரைந்து செய்து வாருங்கள்.

இவ்விதம் தினம்தினம் மறவாமல் முருகப்பெருமானை வழிபாடுகள் செய்து வருவதுடன் அன்னதானம் எனும் உயர்வான அருட்தயவு நெறியினை அவரவரும் ஏற்று தமிழகமெங்கும் செய்து தமிழகத்தினில் உள்ள இல்லாமை எனும் ஏழ்மை நிலையை விரட்டிவிடுங்கள். ஆர்வமுள்ள தன்னார்வமுள்ள தொண்டர்களை, அன்பர்களை தொண்டுகள் செய்திடச் செய்து ஆறுமுக அரங்கன் தலைமையில் சேவை ஆற்றிட வேண்டுமப்பா. உலகமெலாம் ஆறுமுக அரங்கனின் தலைமை ஏற்று நடந்து உலகமெங்கும் முருகப்பெருமான் புகழை பரப்பி வர உலகமெங்கும் அருள் பெருகி இந்த கலியுக சமூகமே பண்பான சமூகமாக மாற்றமடைந்து தமிழகத்திலிருந்து உலகப்பெருமாற்றம் ஆரம்பித்து உலகமெங்கும் மாற்றங்கள் பரவி உலகமே ஞானஆட்சியாக மாறிடும்.

ஆறுமுக அரங்கமகாதேசிகனார் மூலமாக தொண்டுகள் பெருகி வரவர, முருகப்பெருமானின் ஆட்சி வள்ளல் அரங்கராசரின் தருமபலமுடன் பெருகி உலகில் நல்ல மாறுதல்களும் நல்ல ஆட்சியும் உலகினில் பெருகி அற்புதமான வளர்ச்சியினை இவ்வுலகம் அடைந்திடும்.

உலகம் இயற்கை பலம்மிக்கதாய் மாறிடும், வளர்ச்சியையும் வல்லமையும் நேர்மையும்மிக்க தளர்ச்சியற்ற அதிகார பலமும் தயவை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறையும் உலகினில் பெருகி மக்களுக்கு சர்வவிதத்திலும் பாதுகாப்பு பலம் உண்டாகி வலுமிக்க மாற்றமும் முன்னேற்றமும் இவ்வுலகம் வடிவேலன் முருகப்பெருமானால் அடைந்து சிறப்படையும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பட்டினத்தார்.

–சுபம்–